**<u>சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்</u>**
**<u>OS.No. 1294 / 2022</u>**
**<u>and</u>**
**<u>OS.No.1367/2022</u>**

பி.வா.சா.1. சேனாதிபதி 07.03.2025

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அசல் வழக்கு எண்.1367/2022-ன் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:

நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்திற்கு நான் விபரம் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. எனது முதல் விசாரணை சாட்சியத்தில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள கொடி வழி ஜாபிதா முழுமையானதாக இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சரியான கொடி வழி ஜாபிதாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஆனால் எத்தனாவது ஆவணம் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணங்களின் பட்டியலில் உண்மையான கொடி வழி ஜாபிதாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. முழுமையான கொடி வழி ஜாபிதாவை எங்கள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதிகளும் முழுமையான கொடி ஜாபிதா தாக்கல் செய்யாமல் உண்மையான உறவுமுறையை மறைத்துள்ளேன் என்றும் நானும் முழுமையான கொடி ஜாபிதா தாக்கல் செய்யாமல் உண்மையான உறவுமுறையை மறைத்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. வாதிகளும் முழுமையான கொடிவழி ஜாபிதாவை தாக்கல் செய்திருந்தாலும் எங்களது தரப்பில் முழுமையான கொடி வழி ஜாபிபதா தாக்கல் செய்திருந்தாலும் உண்மையான உறவுமுறைகள் வெளிப்பட்டு இருக்கும் எனவும் அந்த நபர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் எனவும் அதை தவிர்ப்பதற்காகவே வாதியும் நாங்களும் முழுமையான கொடி வழிஜாபிதாவை தாக்கல் செய்யாமல் மறைத்திருக்கிறோம் என்றால் சரியல்ல. எனது தாயார் யசோதையம்மாளின் தந்தை பெயர் செம்பாக்கவுண்டர். என்னுடன் உடன்பிறந்தது குணசேகரன், சோனதிபதி, ராஜாத்தி, சுலோசனா, தமிழ்செல்வி என்றால் சரிதான். இவர்கள் யாரையும் தரப்பினராக வாதிகள் தரப்பிலும் எங்கள் தரப்பிலும் சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த சொத்திற்கு கட்டுப்பட்ட மூலபத்திரம் உள்ளது என்றால் தவறு. மூலபட்டா உள்ளது. தாவா சொத்தான சர்வே எண்.54ன் முழுவிஸ்தீரணம் 18 ஏக்கர் 22 செண்ட் ஆகும். இந்த 18 ஏக்கர் 22 செண்ட் பொறுத்து ஏதாவது ஆவணம் எழுதப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா அல்லது தெரியாதா என்றால் மொத்த சொத்தையும் ஒரே ஆவணமாக எழுதவில்லை. பிரித்து பிரித்து எழுதினார்கள். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள 03.03.1955-ல் தேதிய ஆவணம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. செம்பாகவுண்டர் வகையறா சர்வே எண்.54க்கு கட்டுப்பட்ட 18 ஏக்கர் 22 செண்ட் நிலத்தில் 3 குழி நிலத்தை அவர்கள் கையில் வைத்துக் கொண்டு மீதி இடத்தை எனது தாயாருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. எனது தாயாருக்கு எழுதி

வைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் சர்வே எண்.54 என்று இல்லை. ஜமீன் பைபாஸ் நம்பர் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. மஞ்சநாயக்கன்பட்டி, சத்திரப்பட்டி, ஆயக்குடி ஆகிய கிராமங்களில் உள்ள சொத்துக்கள் ஜமீனுக்கு கட்டுப்பட்ட சொத்துக்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி கிராமங்களுக்கு 1960ம் ஆண்டு ஜமீன் பைபாஸ் எண்கள் தான் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. வாதி தியாகராஜன் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரிந்து தான் எதிர்வாதம் செய்தேன் என்றால் சரிதான். அந்த வாதி தரப்பில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. அந்த விபரங்கள் தெரியாமல் தான் எதிர்வாதம் செய்தேன் என்றால் சரியல்ல. வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவா சொத்து வாதிகளுக்கும் இந்த பிரதிவாதிக்கும் பூர்விக வழியில் பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சட்டப்படி செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரி தனியாக வழக்கு தாக்கல் செய்தோ அல்லது இதே வழக்கில் எதிர்கோருரிமையோ கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் எனக்கு எந்தவிதமான பாத்தியமும் இல்லாத காரணத்தினால் தான் நான் அதுபோன்று வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பரிகாரத்தை மறுத்து நான் எந்தவித பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு மூலஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு ஆதரவான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஈடுபத்திரம் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு உரிமை ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் சர்வே எண்.54க்கு 18 ஏக்கர் 22 செண்ட் பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ல் சர்வே எண்.54/5 ல் 90 செண்ட்டிற்கு மட்டும் குணசேகரன் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ஈடு பத்திரத்தில் தாவா சொத்து எனது அப்பா, அம்மாவிற்கு எப்படி பாத்தியப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 ஆவணம் பி.வா.சா.ஆ.5 ஆவணத்திற்கு நான் உற்பத்தி செய்யப்பட்ட மேடு ஓவர் ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 பாக பத்திரத்தில் அந்த சொத்து எப்படி வந்தது என்று குறிப்பிட்டு பாகபிரிவினை செய்தோம் என்றால் பூர்விக பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு பாகம் பிரித்தோம். பி.வா.சா.ஆ,7 பாக பிரிவினை பத்திரத்தில் பூர்விக வழி என்றால் எந்த வழியில் பூர்விக சொத்து என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பத்தா என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லை என்றும் தற்போது இந்த வழக்கிற்காக அப்பத்தாவின் வழியில் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8, 9 ஆவணங்கள் தாவா சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில்

முன்யோசனையின் பேரில் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10, 11, 12, 13, 14, 15 தாவா சொத்திற்கான பட்டா பழனி வட்டாட்சியர் அலுவலகம், கோட்டாட்சியர், மாவட்ட வருவாய் அலுவலகம், மற்றும் சென்னை நிலநிர்வாக அளவையர் அலுவலகம் ஆகியவற்றில் நடைபெற்ற வழக்கின் இறுதியில் தாவா சொத்துக்களான பட்டாவை பொறுத்து இருதரப்பினரும் உரிமையியல் நீதிமன்றத்தை நாடி தீர்வு பெற்றுக் கொள்ளுமாறு முடித்துவைக்கப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பட்டா அனைத்தும் நிலஅளவை ஆணையர் உத்தரவு படி இந்த பட்டாக்கள் செல்லாது என்றால் சரியல்ல. செல்லாத பட்டாவின் அடிப்படையில் செலுத்திய கிஸ்தி ரசீதுகள் செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் செம்பாகவுண்டருக்கும் சிவகிரிபழனிச்சாமி கவுண்டருக்கும் அவரது தந்தை வழியில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் செம்பாகவுண்டரின் வாரிசுகளாக ராமசந்திரகவுண்டருக்கும் தியாகராஜனுக்கும் தலா 45 செண்ட் பாத்தியம் எனவும் சிவகிரிபழனிச்சாமி கவுண்டரின் மகனான ராமசாமிக்கு 90 செண்ட் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 90 செண்டில் சிவகிரிபழனிச்சாமி மகனான ராமசாமிகவுண்டர் அவரது பாகமான 90 செண்ட்டை அவரது மகனான சிவகிரிபழனிச்சாமிக்கு தானமாக எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ராமசாமிகவுண்டர் பட்டாவை போலியாக தயார் செய்த சிவகிரிபழனிச்சாமிக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை போலியாக எழுதிக் கொடுத்ததால் நான் நிலஅபகரிப்பு பிரிவுகள் புகார் கொடுத்து அதன் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு ராமசாமியும் சிவகிரியும் நீதிமன்ற பிணையில் வெளிவந்துள்ளனர். தற்போது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. ஒரு குற்ற வழக்கில் நீதிமன்றத்தின் மூலம் முழுவிசாரணைக்கு பின்னிட்டு தீர்ப்பு வழங்கப்பட்ட பின்பு தான் குற்றவாளியா அல்லது இல்லையா என்று தீர்மானிக்கப்பட்ட பின்பு தான் உண்மை நிலை தெரியவரும் என்றால் இல்லை. அவர்கள் வைத்திருந்த பட்டா உண்மை தன்மை உடையது அல்ல என்று வட்டாட்சியர் அறிக்கை கொடுத்திருந்தார். நான் அந்த பத்திரத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் நீதிமன்றத்திற்கு போகவில்லை. பதிவுத்துறை தலைவர் அவர்களுக்கு மேல்முறையீடு செய்தேன். அதை கோர்ட்டில் சென்று பார்த்துக்கொள்ளுமாறு சொன்னார். அந்த ஆவணம் சட்டப்படியான ஆவணம் என்பதால் தான் எனக்கு அவ்வாறு அறிவுறுத்தப்பட்டது என்றால் சரியல்ல. பதிவுத்துறை அலுவலகம் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக் கொள்ள அறிவுறுத்திய பின்பு நான் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையிலும் தாக்கல் செய்தேன். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை உரிய அதிகார வரம்புள்ள நீதிமன்றத்திற்கு சென்று பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு உத்தரவு பிறப்பித்தது. அந்த உத்தரவுப்படியாவது நான்

வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. சிவகிரிபழனிச்சாமியும் ராமசாமியும் என்மீதும் எனது சகோதரர் மீதும் அதே நிலஅபகரிப்பு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் புகார் கொடுத்தார்கள். அதை தள்ளுபடி செய்துவிட்டார்கள். அந்த புகாரின் பேரில் எனது பெயரிலும் எனது சகோதரர் பெயரிலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ப்பட்டது என்றால் சரிதான். அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. நிலஅபகரிப்பு பிரிவில் எனக்கும் எனது சகோதரருக்கும் எதிராக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகலை தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து சம்மந்தமாக நானும் எனது சகோதரரும் போலியாக பட்டா தயார் செய்தது சம்மந்தமாக நிலஅபகரிப்பு பிரிவில் சிவகிரிபழனிச்சாமி கொடுத்த புகாரின் பேரில் எனது பெயரிலும் எனது சகோதரர் பெயரிலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு இன்று வரை நிலுவையில் இருந்து வருகிறது என்றும் நான் வழக்கிற்காக மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கும் எனது சகோதரருக்கும் எந்தவிதமான உரிமையும் பாத்தியமும் அனுபவமும் கிடையாது என்றும் இந்த பிரதிவாதிகளுக்கு 90 செண்ட்டும் வாதி வகையறாவிற்கு 45 செண்ட்டும் வாதியின் வகையறாவின் மற்றொரு சகோதரர் ராமசந்திகவுண்டருக்கு 45 செண்ட்டும் பாத்தியப்பட்டு அவர்கள் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2025.03.10 10:27:28 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்